Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

சுவிஸ் கூட்டமைப்பு EDI
சுகாதாரப்பிரிவு BAG
பொது சுகாதார துறை

# கோவித் 19 தனிமைப்படுத்தலுக்கான வழிமுறைகள்

*26.06.2021 இலிருந்து செல்லுபடியாகும்*

## இவ் வழிமுறைகள் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை கீழ்வருமாறு பாதிக்கப்பட்டிருப்பின் விளக்குகின்றது ...

**.... நீங்கள் புதிய கொரோனா வைரஸால் கடுமையாக நோயுற்றிருப்பின்**

**மற்றும் / அல்லது**

**.... நீங்கள் புதிய கொரோனா வைரஸால் பொசிடிவ் என சோதனை முடிவு இருக்குமாயின்**

கடுமையான சுவாச வழிநோய்த்தொற்று[1] அல்லது திடீரென வாசனை அல்லது சுவை திறன் இழப்பின் அறிகுறிகள் உள்ளன என்றால், **நீங்கள் உடனடியாக வீட்டிலே உங்களை தனிமைப்படுத்த வேண்டும்,** அவ்வாறு மற்றவர்களுக்கு தொற்றாது இருக்கும். மற்றவர்களுக்கு உங்களால் தொற்று ஏற்படாதிருப்பதுடன் இது மேற்கொள்ளப்படுகின்றது என்பதுடன் நீங்கள் உங்களை சோதிக்க விட வேண்டும்.

உங்களுக்கு அறிகுறிகள் இல்லாதிருந்து பொசிட்டிவ் ஆக புதிய கொரோனா வைரஸ் உள்ளதென கண்டறியப்பட்டிருப்பின், உங்களால் மற்றைய மனிதர்களுக்கு தொற்று ஏற்படக்கூடும் என்பதால் நீங்களாகவே உடனடியாக சுய தனிமைப்படுத்தலுக்கு உங்களை உட்படுத்த வேண்டும்.

இவ் வழிமுறைகள் வைரஸ் தொற்றிப் பரவுதலைத் தடுக்க நீங்கள் எவ்வாறான முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை உங்களுக்குக் காண்பிக்கின்றது. புதிய கொரோனா வைரஸ் பற்றி உங்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் www.bag.admin.ch/coronavirus-de. இல் காணலாம். தவிரவும் www.bag-coronavirus.ch இணையதளத்தில் சுய தனிமைப்படுத்தல் குறித்த விளக்க காணொளி உள்ளது.

புதிய கொரோனா வைரஸ்

பரிசோதனை முடிவு பொசிடிவ் ஆக இருக்கும் பட்சத்தில் பொறுப்பான மாநில அரச நிலையம் உங்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கான மேலதிக தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும்.

**கவனத்தில் எடுங்கள்:** தற்போதுள்ள நிலைமையில் மாநில அரச நிலையம் உங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ள வாய்ப்பு இல்லது போகலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உகளுடன் நெருக்கமான தொடர்பிலுள்ளவர்களுக்கு உங்களுக்குள்ள நோய் பற்றி நீங்களாகவே அறிவியுங்கள். இது தொடர்பான தகவல்களை நீங்கள் கீழேயுள்ள <<**உங்கள் தொடர்புனபர்களும் குடும்பத்தினரும் என்ன செய்ய வேண்டும்?**>> என்ற பகுதியில் பெற்றுக் கொள்ளுங்கள்.

### தனிமைப்படுத்தலுக்கு எடுக்கும் காலம்

தனிமைப்படுத்தலுக்கு எடுக்கும் பரிசோதனை முடிவில் தங்கியுள்ளது.

- நீங்கள் உங்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் பெறுபேறு போசிடிவ் ஆகும். சாதரணமாக நோய் அறிகுறிகள் தொடங்கியதிலிருந்து குறைந்த பட்சம் 10 நாட்கள் வீட்டிலிருந்த தனிமைப்படுத்தல் காலம் கழிந்த பின் நோய்அறிகுறிகள் குணமாகி 48 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் நிறைவுக்கு வருகின்றது.
- நீங்கள் உங்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் பெறுபேறு நெகடிவ் ஆகும்: நோய் அறிகுறிகள் தணிந்து 24 மணித்தியாலங்களின் பின் தனிமைப்படுத்தலை நீங்கள் நிறைவுக்கு கொண்டு வரலாம்.
- நீங்கள் உங்களை **பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை**: நோய் அறிகுறிகள் தொடங்கியதிலிருந்து குறைந்த பட்சம் 10 நாட்கள் கழிந்த பின், நோய்அறிகுறிகள் குணமாகி 48 மணித்தியாலங்களின் பின் தனிமைப்படுத்தப்பட்டிருத்தல் நிறைவுக்கு வருகின்றது.

[1] எ+கா. இருமல், தொண்டை நோய், காய்ச்சலுடன் அல்லது காய்ச்சல் இல்லாமல் மூச்சுத் திணறல், காய்ச்சல் குணம், தசை வலி

- பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பொழுது உங்களுக்கு நோய் அறிகுறிகள் எதுவும் இல்லை: சுய தனிமைப்படுத்தலை பரிசோதனை செய்து 10 நாட்களின் பின் நிறைவு செய்யுங்கள்.

*10 நாட்கள் நிறைவுற்ற பின்பும் மெல்லிய இருமல் அல்லது சுவை மற்றும் வாசனை உணர்வுகளின் இழப்பு மட்டுமே அறிகுறிகளாக இருக்கும் பட்சத்தில், நீங்கள் தனிமைப்படுத்தலை நிறுத்த முடியும். சுவை மற்றும் வாசனை நரம்புகள் மீள்ச்சிபெற நீண்ட காலம் எடுக்கலாம்.*

**உங்கள் ஆரோக்கியத்தை கண்காணிக்கவும்**

- உங்கள் நிலையை குறித்து கவலைக்கிடமாக இருப்பின் பயப்பட்டால் அல்லது பின்வரும் எச்சரிக்கை அறிகுறிகளுள் ஏதாவதொன்று தோன்றினால் மருத்துவரை தொலைபெசியூடாக தொடர்புகொள்ளவும்:
  - பல நாட்கள் நீடிக்கும் காய்ச்சல்
  - பல நாட்கள் நீடிக்கும் பலவீன உணர்வு
  - மூச்சுத் திணறல்
  - மார்பில் அழுத்த உணர்வு அல்லது வலுவான வலி
  - புதிதாக ஏற்படும் குழப்ப உணர்வு
  - நீல நிற உதடுகள் அல்லது முகம்

**நீங்கள் தனியாக வாழ்ந்தால்**

- உணவுப் பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாத பொருட்டகளை எ+கா மருந்துகளை குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது விநியோக சேவையால் உங்கள் வீட்டில் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

**நீங்கள் ஒரு வீட்டில் மற்றவர்களுடன் வாழ்ந்தால்**

- கதவுகளை மூடக்கூடிய அறையை தயார் படுத்தி அதில் இருந்து கொள்ள வேண்டும், அத்துடன் அறையில் உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் அறையின் சாளரங்களை தவறாமல் திறந்து காற்றோட்டத்தை பெறுங்கள்.
- சகல சந்திப்புகள் மற்றும் தொடர்புகளைத் தவிர்க்கவும், தேவைப் பட்டால் மட்டுமே அறையை விட்டு வெளியேறுங்கள்.
- உங்கள் அறையை விட்டு வெளியேற வேண்டியிருப்பின், சுகாதார முகக்கவசமொன்றை அணிவதுடன் மற்றவர்களிடம் இருந்து ஆகக்குறைந்த இடைவெளியாக 1,5 மீட்டர் வைத்திருங்கள்.
- உங்கள் செல்லப்பிராணிகளுடன் எந்த தொடர்பையும் தவிர்க்கவும்.
- உங்கள் சொந்த குளியலறையைப் பயன்படுத்துங்கள். இது முடியாவிட்டால், கடைகளில் கிடைக்கக்கூடிய கிருமிநாசினியைக் கொண்டு ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பிறகும் (தொட்டி, மலசாலை, குழியல்தொட்டி) சுத்தம் செய்யுங்கள்.
- கோப்பைகள், கரண்டிகள் போன்ற சமையலறை பாத்திரங்கள் மற்றும் வீட்டு பொருட்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம். பயன்பாட்டிற்குப் பிறகு, இந்த பொருட்களை சலவை இயந்திரத்தில் கவனமாக கழுவவும் அல்லது சோப்பு மற்றும் தண்ணீரில் கவனமாக கழுவவும்.
- துவாய் அல்லது கட்டில்லுறையை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
- உணவுப் பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாத பொருட்களை எ+கா: மருந்துகள், குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது விநியோக சேவையால் உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்ளுங்கள்.

**ஒழுங்காக கைகளை கழுவுதல்**[2]

- நீங்களும் உங்களைச் சுற்றியுள்ளவர்களும் குறைந்தது 20 விநாடிகளுக்கு சவக்காரம் மற்றும் தண்ணீரில் கைகளை தவறாமல் கழுவ வேண்டும். சவக்காரம் மற்றும் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், உங்கள் கைகளை ஒரு கிருமிநாசினியால் சுத்தம் செய்து, அவை காய்ந்திருக்கும் வரை முழு கையையும் கிருமிநாசினியால் தேய்த்துக் கொள்ளுங்கள். கைகள் பார்வைக்கு அழுக்காக இருக்கும்போது சவக்காரம் மற்றும் தண்ணீர் பயன்படுத்தப்பட வேண்டும்.
- குறிப்பாக உணவு தயாரிப்பதற்கு முன்னும் பின்னும், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், கழிப்பறையைப் பயன்படுத்தியபின்னும், கைகள் அழுக்காக இருக்கும் போதெல்லாம் உங்கள் கைகளைக் ககளுவுங்கள்.

**நீங்கள் இருமி அல்லது தும்மினால் வாயை மூடிக்கொள்ளுங்கள்**

- நீங்கள் தும்மும்போது அல்லது இருமும்போது உங்கள் வாயையும் மூக்கையும் ஒரு காகித கைக்குட்டயால் மூடிக்கொள்ளுங்கள்.

---

[2] காணொளி சரியாக கை கழுவுதல்: https://youtu.be/gw2Ztu0H0YY

- *உங்கள் வாயை அல்லது மூக்கை மூடிய பொருட்கள் தூக்கி எறியப்பட வேண்டும் அல்லது கழுவப்பட வேண்டும்.*
- *பயன்படுத்தப்பட்ட காகித கைக்குட்டைகளை உங்கள் அறையில் ஒரு பிளாஸ்டிக் பையுடன் ஒரு சிறப்பு குப்பைத்தொட்டியில் எறியுங்கள்.*

***நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தால் (நோய் பரிசோதிக்க அல்லது மருத்துவரின் ஆலோசனை பெற):***

- ***சுகாதார முகக்கவசமொன்றை அணியுங்கள்.*** *உங்களுக்கு கடுமையான சுவாசவளித் தொற்றுநோய்க்கான அறிகுறிகள் இருக்குமாயின், துநியிலாண்ட முகக்கவசத்தை அணிதலாகாது.*
- ***வீட்டை விட்டு வெளியேற முன் உங்கள் கைகளை கழுவுங்கள் அல்லது கிருமிநாசினியை பயன்படுத்துங்கள்.***
- ***பொது போக்குவரத்தைத் தவிர்க்கவும்.*** *நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உங்கள் சிற்றூர்தியை அல்லது மிதிவண்டியை பயன்படுத்துங்கள், நடந்து செல்லுங்கள் அல்லது டாக்சியை அழைக்கவும்.*

***சுகாதார முகமூடியின் சரியான பயன்பாடு***

- *முகமூடியைப் போடுவதற்கு முன்பு சவர்க்காரம் மற்றும் தண்ணீரில் அல்லது கிருமிநாசினியைக் கொண்டு கைகளைக் கழுவவும்.*
- *மூக்கு மற்றும் வாயை மூடிமறைக்கும் வகையில் சுகாதார முகக்கவசத்தை கவனமாக வைத்து, அதை இறுக்கிக் கொள்ளுங்கள், இதனால் அது முகத்திற்கு மெதுவாக பொருந்துகிறது.*
- *முகக்கவசத்தைப் போட்டவுடன் அதைத் தொடாதீர்கள். பயன்படுத்தப்பட்ட சுகாதார முகக்கவசத்தைத் தொடும் ஒவ்வொரு முறையும், எ.கா. களட்டி வைத்ததும், உங்கள் கைகளை சவர்க்காரம் மற்றும் தண்ணீருடன் அல்லது கிருமிநாசினியுடன் கைகளை கழுவுங்கள்.*
- *ஒரு சுகாதார முகக்கவசத்தை 4 மணி நேரம் அணியலாம்.*

*தயவு செய்து விரிவான விளக்கத்தினை* www.bag.admin.ch/masks *இன் கீழ் சரியாக கையாளுதல் என்பதன் கீழ் அவதானிக்கவும்.*

***தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்கவும்***

- *உடல் திரவங்களால் (மலம், ரத்தம், சளி) மாசுபடுத்தப்பட்ட கழிவுகளை மற்ற கழிவுகளுடன் வெளியேற்றுவதற்கு முன்பு உங்கள் அறையில் ஒரு பிளாஸ்டிக் பையுடன் ஒரு சிறப்பு குப்பைத்தொட்டியில் வீச வேண்டும்.*
- *ஒரு சாதாரண கிருமிநாசினியுடன் தினமும் படுக்கை மேற்பகுதிகளையும், கட்டில் மற்றும் பிற படுக்கையறை தளபாடங்கள் போன்ற தொட்ட மேற்பரப்புகளை சுத்தம் செய்து கிருமிகளை அழியுங்கள்.*

***பெற்றோர் மற்றும் பிள்ளைகலின் சுய தனிமைப்படுத்தல்***

- *அடிப்படியில் பிள்ளைகள் மற்றும் பெற்றோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருகையில் சாதாரண தனிமைப்படுத்தலுக்கான ஒழுங்கு விதிகள் செல்லுபடியாகும்.*
- *குடும்பத்துக்கு வெளியே வேறு நபர்களுடன் பிள்ளை எவ்வித தொடர்பையும் வைத்திருப்பதற்கு அனுமதி இல்லை.*
- *பிள்ளை மட்டும் சுய தனிமைப்படுத்தலில் இருப்பின், வீட்டிலுள்ள ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடன் இருக்கும் தொடர்பு முடியுமானவரை குறைக்கப்பட வேண்டும். எவ்வளவு தூரம் இது சாத்தியம் என்பது பிள்ளையின் வயதைப் பொறுத்து உள்ளது. பிள்ளையின் தேவைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், விசேடமாக சிறு பிள்ளைகளாயின்.*
- *பெற்றோரில் ஒருவர் சுய தனிமைப்படுத்தலில் இருந்து பிள்ளை அப்படி இல்லாதிருப்பின், பிள்ளைப்பராமரிப்பு தனிமைப்படுத்தலின்பொழுது மற்றைய பெற்றோரினால் (தாய் அல்லது தந்தை) மேற்கொள்ளப்படுவதுடன் இப் பெற்றோர் பகுதி தொடர்புநபராக இருக்க வேண்டும்.*
- *இரண்டு பெற்றோரும் சுய தனிமைப்படுத்தலில் இருந்து பிள்ளை அப்படி இல்லாதிருப்பின்,எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பது பிள்ளையின் வயதையும் செய்யப்படக்கூடியதையும் பொறுத்து உள்ளது. பிள்ளைப்பராமரிப்பு வேறு நபர்களால் ஒழுங்கர் செய்யப்பட முடியாதிருந்து பிள்ளை சுயமாக தனது நாளாந்த விடயங்களுடன் மேலே குறிப்பிட்ட பாதுகாப்பு நடைமுறைகளை தானாகவே ஒருங்கிணைக்க முடியாதவிடத்து, பிள்ளையையும் சேர்த்து தனிமைப்படுத்தலுக்கு எடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டும்.*

### தனிமைப்படுத்தலின் போது சமூக தொடர்புகள்

- நீங்கள் இப்போது தனிமைப்படுத்த வேண்டியிருப்பினும் கூட, நீங்கள் அனைத்து சமூக தொடர்புகளையும் துண்டிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல: தொலைபேசி, ஸ்கைப் போன்றவற்றின் மூலம் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள். உங்கள் அனுபவம், உங்கள் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளைப் பற்றி பேசுங்கள்.
- இது உங்களுக்குப் போதுமானதாக இல்லாவிட்டால் அல்லது இது உங்களுக்கு சாத்தியமில்லை என்றால்: உங்களுக்கு ஏதேனும் கவலைகள், அச்சங்கள் அல்லது சிக்கல்கள் இருந்தால், 143 தொலைபேசி எண்ணை அழைக்கவும் (“Dargebotene Hand”). இந்த எண்ணில் 24 மணிநேரமும் இலவசமாக ஆலோசனைகள் கிடைக்கும்.
- மேலதிக தகவல்கள் ஆன்லைன் www.dureschnufe.ch

Dureschnufe

### தனிமைப்படுத்தல் நிறைவுற்ற பின்னர்

- «இவ்வாறு எம்மை நாம் பாதுகாப்போம்» (www.bag.admin.ch/so-schuetzen-wir-uns), என்ற பிரச்சாரத்திற்கேற்ப சுகாதார மற்றும் நடத்தை விதிகளை தொடர்ந்தும் கடைப்பிடியுங்கள்.
- கோவிட்-19-தடுப்பூசியைப் போடுவதற்கு தயாராகுதல்: சார்ஸ்-கோவ்-2 தொற்றியதாக உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நபருக்கு வழமையாக ஆறுமாதங்களுக்கு உள்ளாக ஒரேயொரு தடவை தடுப்பூசியைப் போடுமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது (விசேடமாக பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற நபர்களுக்கு மூன்று மாதங்களுக்குள்[3]). பின்வரும் இணையத்தளத்தில் www.bag.admin.ch/impfen-covid19 அல்லது உங்கள் மாநிலத்தில் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு எம்மை நாம் பாதுகாப்போம்

### உங்கள் தொடர்பில் உள்ளவர்கள் மற்றும் குடும்பத்தினர் என்ன செய்ய வேண்டும்?

- உங்களோடு தொடர்பில் உள்ளவர்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் அவர்களின் உடல்நலத்தை கண்காணிக்க வேண்டும் என்பதுடன் உங்களுடைய பரிசோதனை முடிவு கிடைக்கும் வரை «இவ்வாறு எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம்» (www.bag.admin.ch/so-schuetzen-wir-uns ) என்ற பிரச்சாரத்திகேற்ப சுகாதார மற்றும் நடத்தைவிதிகளை, கடைப்பிடிக்க வேண்டும். அறிகுறிகள் ஏற்பட்டால், நீங்களும் தனிமைப்படுத்தலை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். இந்த அறிவுறுத்தலில் விவரிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் பற்றிய அதே பரிந்துரைகளை அவர்கள் பின்பற்ற வேண்டும்.
- உங்களின் பரிசோதனை நோய் உள்ளதை உறுதிப்படுத்தினால்: உங்களுக்கு பொறுப்பான மாநில சுகாதார சேவையுடன் சேர்ந்து, தனிமைப்படுத்த வேண்டிய உங்கள் நெருங்கிய தொடர்புகளை நீங்கள் அடையாளம் காண்பதுடன், அந்த தொடர்பு நபர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட மாநில சேவை நிலையம் உங்களுடன் குறுகிய களத்தினுள் தொடர்பு கொள்ளமுடியாத பட்சத்தில்: இவ்வாறான சந்தர்ப்பத்தில் உங்கள் தொடர்புகளை நீங்களாகவே உங்களது தொற்றுநோய் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
- உங்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு செல்ல வேண்டும். உங்களுக்கு தடுப்பூசி ஒன்று முழுமையாக போடப்பட்டிருப்பின் அல்லது கடந்த ஆறு மாத காலத்தினுள் உங்களுக்கு கோவிட்-19 ஏற்பட்டிருப்பின் (ஆய்வுகூட உறுதிப்படுத்தல் சம்பவம்), தொடர்ந்தும் நீங்கள் வழமையான சுகாதார மற்றும் நடத்தை விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்[4].

### நீங்கள் யாருக்கு அறிவிக்க வேண்டும்

- அறிகுறிகள் தோன்றுவதற்கு இரண்டு நாட்கள் முன்னர் நீங்கள் தொடர்பு வைத்திருந்த அனைவர்க்கும்: உங்களுடன் அறிகுறிகள் இருந்தபோது அல்லது உங்கள் அறிகுறிகள் ஏற்படுவதற்கு 48 மணிநேரதிற்கு முன்பு பாதுகாப்பு இல்லாமல் குறைந்தது 15 நிமிடங்கள் 1,5 மீட்டருக்கும் குறைவான தூரத்தில் தொடர்பு கொண்ட நபர்கள் ஆவார்கள். இந்த நபர்கள் தனிமைப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்க வேண்டும். (www.bag.admin.ch/isolation-und-quarantaene).
- «சாதகமான பரிசோதனை முடிவு பெற்ற நபர் ஒருவருடன் எனக்கு தொடர்பு இருந்தது . நான் என்ன செய்ய வேண்டும்?» என்பதற்கான விடையை பின்வரும் பக்கத்தில் www.bag.admin.ch/isolation-und-quarantaene நீங்களும் உங்களுடன் தொடர்பு கொண்டவர்களும் காண்பதுடன் மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிமைப்படுத்தல் பரிந்துரை

---

[3] யார் விடேமாகப் பாதிக்கப்படுவார்கள்? பார்க்க www.bag.admin.ch/coronavirus-de > Krankheit, Symptome, Behandlung > Besonders gefährdete Personen

[4] www.bag.admin.ch/so-schuetzen-wir-uns

- *உங்கள் தொடர்பு நபர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டியிருப்பின், ஏனெனில் அவர்கள் உங்களுடன் நெருகிய தொடர்பில் இருந்துள்ளார்கள். அவ்வாறாயின் வருமான இழப்பீட்டுக்கான சட்ட உரிமை உங்களுக்கு உள்ளது. இவை பற்றிய தகவல்களை சமூகக்காப்புறுதிக்கான கூட்டாட்சி அலுவலகத்தின் (BSV) இணையத்தளத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.*

BSV